உ
சிவமயம்

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கொண்ட



Printed by Harikanan Printers, Jaffna

அமரர் திருமதி. V.S கணபதிப்பிள்ளை பத்மாவதி

(பவளம்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**27-01-2003**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட

## அமரர்

## திருமதி. V.S. கணபதிப்பிள்ளை பத்மாவதி (பவளம்)

## அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 27-1-2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

"உலகில் பிறந்தவை யாவும்
மடியும் என்பது நியதி
இல்லற வாழ்க்கையினை
நல்லறமாக்கி தம் மக்களுக்கு
நல்வழி காட்டி
பந்தங்களை விட்டொழித்து
ஞானியென எண்ணி
எம்மை பிரிந்து சென்ற
அமரர் பத்மாலதி அவர்களின்
திருவடிகளில் இந்நினை மலரினை
சமர்ப்பிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மண்ணில்

1933 . 02 . 10



விண்ணில்

2002 . 12 . 28

# அமரர்
## திருமதி V.S கணபதிப்பிள்ளை பத்மாவதி
## [பவளம்]

### திதி வெண்பா

சித்திர பானு வருஷ மார்கழி மாத அபரபட்சத்து
தசமிதிதியில் (28.12.2002)ல்
இறையடி சேர்ந்திட்ட திதி காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

# பஞ்சபுராணம்

## தேவாரம்

மங்கையர்க் கரசி வளர்வை கோன் பாவை
வரிகளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணி செய்து நாள்தொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களு மருளி
அங்கயர் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்தோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே

# திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை! வளர்கநம்
பக்தர்கள்! வஞ்சகர் போய் அகல
பொன்னின்செய் மண்டலத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

# திருப்புராணம்

ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொது நடம்போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேய
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# விநாயகர் கவசம்



(இது முத்தல முனிவருக்கு காசிப மகரிஷி உபதேசித்தது. இதைத்தமிழில் கச்சியப்ப சுவாமிகள் பின்வருமாறு பாடித் தந்துள்ளார்)

வளர்ச்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க; வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசௌந் தரதேக
மகோற்கடர் தாம் அமர்ந்து காக்க;
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
சிபர்காக்க; புருவந் தம்மைத்
தளர்வில்மகோ தரர்காக்க; தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க;

கவின் வளரும் அதரங்கச முகர்காக்க;
தால் அங்கணக் கிரீடர் காக்க;
நவில்சிபுகம் கிரிசைசுதர் காக்க; நனி
வாக்கைவிநா யகர்தாம் காக்க;
அவிர்நகைதுன் முகர்காக்க அள் எழிற்செஞ்
செவிபாச பாணி காக்க;
தவிர்தலுறா திளங்கொடி போல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமருபூ முகந் தன்னைக் குணேசர்நனி
காக்க; களம் கணேசர் காக்க;
வாமமுறு இருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தாம் மகிழ்ந்து காக்க;
ஏமமுறு மணிமுலைவிக் கினவிநா
சன்காக்க இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க; அகட்
டினைத்துலங்கு ஏரம்பர் காக்க;

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க;
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினகரன் காக்க; விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாம் காக்க;
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்க; சகனத்தை அல்லல்
உக்ககண பன்காக்க; ஊருவைமங்
களமூர்த்தி உவந்து காக்க;

தாமுழந்தாள் மகாபுத்தி காக்க; இரு
பதம்ஏக தந்தர்காக்க;
வாழ்கரம்கிப் பிரப்பிரசா தனர்காக்க;
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச் செய் ஆசாபூ ரகர்காக்க
விரல்பதும அத்தர்காக்க,
கேழ்கிளரும் நகங்கள்விநா யகர்காக்க;
கிழக்கினிற்புத் தீசர் காக்க;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினியிற் சித்தீசர் காக்க; உமா
புத்திரர்தென் திசை காக்க;
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க;
விக்கினவர்த் தனர்மேற்கென்னுந்
திக்கதனிற் காக்க; வாயுவிற்கசகன்
னர்காக்க; திகழு தீசி
தக்கநிதி பன்காக்க; வடகிழக்கில்
ஈசநந் தனரே காக்க;

ஏகதந்தர் பகல்முழுதுங் காக்க; இர
வினுஞ்சந்தி இரண்டன் மாட்டும்
ஓசையின்விக் கினகிருது காக்க; இராக்
கதர்பூதம் உறுவே தாளம்
மோனியைபேய் இவையாதி உயிர்த்திறத்தால்
வருந்துயரும் முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க;

மதிஞானம் தவம்தானம் மானம்ஒளி
புகழ்குலம்வண் சரீரம் முற்றும்
பதிவான தனம்தானி யம்கிருகம்
மனைவிமைந்தர் பயில்நட் பாதிக்
கதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க;
காமர்பவுத் திரர்முன் னான
விதியாகும் சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றிசீ விதங்கபிலர் காக்க; கரி
யாதியெலாம் விகடர் காக்க;
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடின்நும்பால் இடையூறு றொன்றும்
ஒன்றுறா, முனிவர்கள்! அறிமின்கள்
யாரொருவர் ஓதினாலும்
மன்றஆங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும்.

**திருச்சிற்றம்பலம்**

## விநாயகர் கவசம்

**ஆதியில் இக் கவசத்தை காசிப முனிவர் முற்கல முனிவருக்கு அருளிச் செய்ய அவர் மாண்டவிய முனிவருக்கு அனுக்கிரகிக்க, அவர் மரீசி முனிவருக்கு உபதேசித்தருள அவர் பல முனிவர்களுக்குத் திருவாய் மலர்ந்தளிச் செய்தன ரென்றறிக**

.

நித்யகருமங்களை முடித்து பரிசுத்தமாகிய ஓரிடத்தில் இருந்து கொண்டு ஒன்றுபட்ட மனத்துடனே விநாயகரை தியானித்து, பக்தியுடனே இந்தக் கவசத்தைப் பாராயணஞ் செய்பவர்களுக்குப் பிணியும் வறுமையும், பேய் பூதங்களாலுண்டாகின்ற பல துன்பங்களும், கவலைகளும், பாப முதலியவைகளும் நீங்கும். அன்றியும், பெருஞ் செல்வமும், தீர்க்காயுளும், களத்ரபுத்திர மித்திராதிகளும் உண்டாகும். மேலும், யாத்திரையிலே இதைச் செபித்தால், சகல விக்கினமும் போய் பயன்களெல்லாம் கைகூடும். யுத்தத்திலே இதனைச் சொன்னால் ஜெயமுண்டாகும். இருபத்தொரு நாள் நாளொன்றுக்கு ஏழுமுறை தோத்திரஞ் செய்தால், மாரண நீங்குவதன்றி உச்சாடணம் ஆக்ருஷணம் ஸ்தம்பந முதலியவைகள் பயனுறும், இருபத்தொருநாள் நித்தியம் இருபத்தொருதரஞ் செபித்தால், சிறையிருப்பு விடுதலையாவதுமன்றி, அரசர்களு டைய நிஷ்டூரமும் நீங்கும். அரசனைக் காணப்போகும் போது பக்தியினால் மூன்று தரம் இதை ஓதினால் அவன் வசப்படுவான். இதைப் படித்தாலும், ஒருவர் சொல்லக் கேட்டாலும், பூசித்தாலும், எப்படிப்பட்ட துன்பமும் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

இந்து மாக் கடலின் முத்தெனப் புகழப்படுவது இலங்கைத்தீவு. இத் தீவின் வடக்கே யாழ் பாடிப் பரிசு பெற்ற யாழ்ப்பாணத் தீப கற்பம் உண்டு. இத்தீப கற்பத்தில் பலவளமும் சிறந்த அழகு கிராமம் சுதுமலை. தென்னையும் கனி தருமரங்களும் நிறைந்த பூமி இவ்வூர். இச் சுதுமலைப் பகுதியிலே சீரோடும் சிறப்போடும் வாழ்ந்தவர் திரு.சின்னத்தம்பி. அவருக்கு இல்லறத் துணைவியாக வாய்த்தவர் சின்னம்மா. வள்ளுவன் வகுத்த இல்லற இலக்கணப்படி வாழ்ந்த இவர்களுக்குச் செல்வமாக உதித்தவர் பத்மாவதி (பவளம்). பவளம் போல் பிள்ளையை வளர்த்து வீட்டிற்கு பவளம் என்றும் பெயருமிட்டனர். மலர்ந்த 10.02.1933ல் இப் பூவுலகில் மலர்ந்த பவளம் பெயருக்கேற்ற குணமுடையவளாக வளர்ந்து வந்தார். உரிய வயதை எட்டியதும் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலையில் தனது படிப்பைத் தொடர்ந்தார்

திருமணப் பராயத்தை எட்டிய போது அவரைத் திருமணக் கோலத்தில் பார்க்க விளைந்தனர் பெற்றோர். மங்கைக்கேற்ற மணவாளனாக மானிப்பாயைச் சேர்ந்த V.S.கணபதிப்பிள்ளை என்பவரை மருமகனாகத் தேர்ந்தனர் இறையருளை எண்ணிக் கரம்பிடித்த கணபதிப்பிள்ளை பத்மாவதி தம்பதியினர் பாலும் சுவையும் போல இணை பிரியாத் தம்பதியராய் இன்பமுடன் வாழ்ந்து வந்தனர். சுதுமலைப் புவனேஸ்வரி அம்பாள் அருளாலும் மானிப்பாய் வேற்கை முருகன் அருளாலும் இனிதே ஓடிய இல்லற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பத்தின் இனிய பேறாய் பாலறூபி, பாலரோகினி, பாலறஞ்சினி, கண்ணகை ஆகியோரை அருமை மக்களாகப் பெற்றெடுத்தார். இதனால் மக்களைப் பெற்ற மகராசியென பார்போற்ற வாழ்ந்தார் பவளம்.

பிள்ளைச் செல்வங்களின் மழலையில் திளைத்தவர். அவர்கள் வளர்ந்து பராயம் எய்தியதும் அவர்களையும் இல்லற வழியில் தன்கடனாற்ற வழி காட்டினார். இதன் பேறாய் கணேசு, திருவாஞ்சீஸ்வரன், சுப்பிரமணியம், குலேஸ்வர – குமார் ஆகிய செம்மல்களை மருமக்களாய் வாய்க்கப் பெற்றார்.

திரைகடலோடியும் திரவியம் தேடு என்பதற்கேற்ப பிள்ளைகளினதும் மருமக்களின் முயற்சியையும் பேரக் குழந்தைகளின் மழலைப் பேச்சிலும் பேரானந்தம் அடைந்த பவளம் திருமண நாளில் பெரியோர் "ஆல் போல் தளைத்து அறுகுபோல் வேர் ஊன்றிப் பல்லாண்டு காலம் வாழ்க" என்று வாழ்த்திய வாழ்த்துக்களை இனிமையோடு நினைவு கூர்ந்து வாழ்ந்துவந்தார்.

ஆண்டுகள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பத்மாவதி (பவளம்) இவ்வுலக வாழ்வை இனிதே முடித்துப் பேரின்ப வாழ்வுக்காய் மார்கழி மாதம் அபர பட்சத்து தசமி திதியில் (2002.12.28) சிவபதம் அடைந்தார். அன்னாரின் ஆன்மா இறையடி சேர்ந்து நித்தியமான பேரின்ப வாழ்வில் அமைதி பெறுவதாக.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற் சுண்ணம்

## தில்லையில் அருளியது

**திருச்சிற்றம்பலம்**

01.

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன் அம்மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே.

02.

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும்நாமே

03.

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளமை யாள் கொழுநற்கு
ஏய்ந்த பொற் சுண்ணம் இடித்தும்நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

O4.

காசணி மின்கள் உலக்கையெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

O5.

அறுகெடுப் பார் அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ க்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே.

O6.

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமே ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும்நாமே.

O7.

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப் பொற் சுண்ணம் இடித்து மநாமே.

08.

வாட்ட ங்கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிபபாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

09.

வையக மெல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே.

10.

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையோ டாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே.

12.
மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண்டு அருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே.

13.
மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன் எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே.

14.
சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந் துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான் கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே.

15.

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

16.

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன் செய் சுண்ணம் இடித்தும்நாமே.

17.

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும்நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. அயன்தலை கொண்டுசென் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின்று ஆடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும்நாமே.

19.

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டு நின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே.

20.

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இருள் ஆயினார்க்குத்
துன்பமு மாய் இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினாருக்கு
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


காரியம் செய்வது என்று துணிந்து விட்டால்
யாரையாவது பகைத்துக் கொள்ளத்தான் வேண்டும்
பகை இல்லாதவன் என்று ஒருவன் பெயர் எடுத்தால்
அவன் ஒரு காரியமும் செய்யாதவன் என்று பொருள்
துணிவு உள்ளவன் காரியமும் செய்தே தீருவான்

இவ்வுலகில் மானிட வாழ்வில் தாம் பெற்ற இவ்வரிய வாய்ப்பை தெய்வசிந்தனையோடும் நல்எண்ணத்துடனும் எம்மால் மற்றவர்களுக்கு எவ்விதத்திலேனும் ஆற்றக் கூடிய உதவிகளைச் செய்வதோடு மாத்திரமல்லாது, சமுதாயக் கருமத்தில் மற்றவர்களோடு முன்னின்று ஒத்துழைப்பதோடு நற் சிந்தனைகளைப் புகட்டும் பணியிலும் ஈடுபடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விருட்சம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



எமது அன்புத் தெய்வத்தின் மரணச்
செய்தி கேட்டு எமது இல்லம் நாடி வந்து
எமது துயரில் பங்கு கொண்டு
இறுதிக்கிரியை, அந்தியேட்டி
ஆகியவற்றின் போது சகல விதமான
உதவி புரிந்தும் பலவிதத்திலும்
ஒத்துழைத்த அனைவருக்கும் எமது
இதய பூர்வமான நன்றிகள்.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக்கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ அது நாளை
மற்றொருவருடையதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-

Harikanan Printers, 424, K.K.S. Road, Jaffna. T.P 021-2222717

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org